(இ) பரம்பிக்குளம்—ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993 ஆம் ஆண்டு பரம்பிக்குளம் —ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப் படுத்துதல்) சட்டமுன்வடிவு, பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு பரம்பிக்குளம்— ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க .. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க .. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

10. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்) நிதி ஒதுக்க எண் (2) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவு, ஆய்வு செய்தல். 1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 2). சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 17/1993), மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1993 ஆம் ஆண்டு தமிழ் நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 17/1993) ஆய்வுக்கு @எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

@27—4—1993 ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளி யிடப்பெற்றுள்ளது.